**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 - ஆம் நாள் வியாழக்கிழமை

TNTV06-000072-2016

**அசல் வழக்கு எண்.67/2016**

1. தனலெட்சுமி (இறந்தவர்)
2. பாலகிருஷ்ணன்
3. கலையரசன்
4. கலைவேந்தன்
5. கலையரசி

(Amended as per Order in I.A.No.294/2025, Dt: 12.08.2025)

.... வாதிகள்

**// எதிர் //**

1. தமிழரசன்
2. சிலம்பரசன் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செந்தமிழ்ச்செல்வன், B.A., B.L., அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வழக்கிடை சொத்துக்களில் பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான முறையில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்துள்ள வழக்குரை வரைபடத்தில் A, B, C, D மற்றும்

E, F, G, H, என காட்டப்பட்டுள்ள சொத்துக்களை வாதிகளுக்கு மீட்டளித்து தரக் கோரியும், வாதிகளுக்கு பிரதிவாதிகள் செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதிகள் தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :-**

**2.1.** வழக்குரையில் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிடை சொத்துக்களானது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, தளிக்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. 1ம் வாதியின் அனுபவத்தில் இருந்து வரும் வழக்கிடை சொத்து ஆதியில் தளிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த கோவிந்தசாமி மகன் வேலுச்சாமி என்பவருக்கு சொந்தமாக இருந்து அவர் இறந்த பிறகு அவர் வாரிசுதாரர்களான அவரது மனைவி பூங்கோதை, மகன்கள் சசிக்குமார், செந்தில்குமார், அசோக்குமார் ஆகியோரிடமிருந்து 1ம் வாதி 12.09.2014 ம் தேதியன்று கிரயம் வாங்கப்பட்டதாகும். 1ம் வாதி வழக்கிடை சொத்தை வாங்கியதற்கான கிரய ஆவணம் உள்ளிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.750/2014 என பதிவாகியுள்ளது. மேற்படி சொத்து அ பட்டியல் என வழக்குரையில் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ளது.

**2.2.** மேற்படி 1ம் வாதி வழக்கிடை சொத்துக்களை கிரயம் பெற்ற நாள் முதல் ஆண்டு அனுபவம் செய்து வருவாய் ஆவணங்களை தன் பெயரில் மாற்றிக்கொண்டு அனுபவித்து வந்துள்ளார். இந்த நிலையில் 1ம் வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்களுக்கு வடக்கு பகுதியிலும், கிழக்கு பகுதியிலும் 2ம் பிரதிவாதி சர்வே எண்.199AB/9B ல் 0.09.5 ஏர்ஸ் (72 குழி) நிலத்தினை வாங்கியுள்ளார். மேற்படி 2ம் பிரதிவாதி வழக்கிடை சொத்தின் அருகாமையில் வாங்கிய நிலத்தின் கிரய ஆவணம் உள்ளிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.874/2015 என பதிவாகியுள்ளது.

**2.3.** மேற்படி 2 ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்களுக்கு அருகாமையில் இருந்த நிலத்தை வாங்கியதிலிருந்து சட்ட விரோதமான முறையில் வழக்கிடை சொத்துக்களில் ஒரு பகுதியை அத்துமீறி பிரவேசித்து ஆக்கிரமிக்க முயற்சித்து வந்துள்ளார். 1ம் வாதி மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வழக்கிடை சொத்துக்களின் எல்லைகளின் உண்மை தன்மையினை பிரதிவாதிகளுக்கு எடுத்துரைத்திட கடந்த 27.10.2015 ம் தேதியன்று நில அளவையரிடம் பணம் செலுத்தி அவருக்குரிய நிலத்தினை அளந்து அத்து காண்பித்து எல்லைகளை தெளிவுபடுத்தியுள்ளனர். ஆனால் பிரதிவாதிகளோ மேற்படி நில அளவையர் அளந்ததையெல்லாம் பொருட்படுத்தாமலும் 2 ம் பிரதிவாதி தாம் வாங்கிய நிலத்தின் பூமி அளவை விட (72 குழி) வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்களில் அபகரிக்கும் நோக்கோடு முயற்சித்துள்ளனர்.

**2.4.** இந்நிலையில் கடந்த 28.11.2015 ம் தேதியன்று பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான சர்வே எண்.199AB/9B ல் 0.09.5 ஏர்ஸ் (72 குழி) மட்டும் வேலி அமைக்காமல் 1ம் வாதிக்கு சொந்தமான நிலத்தை அபகரிக்கும் நோக்கோடு அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்து 1ம் வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்தின் எல்லையாக இருந்த 1ம் வாதிக்கு சொந்தமான வரப்புகளை எல்லாம் சிதைத்து சேதப்படுத்தி வேலி அமைக்க முயற்சித்துள்ளனர். இதை தட்டிக்கேட்ட 1ம் வாதியின் கணவரை ஆபாசமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்து 1ம் வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்களில் ஒரு பகுதியான சர்வே எண்.199AB/8 ல் கிழக்கு பகுதியில் வடக்கு தெற்காக 6 குழி நிலத்தையும் சர்வே எண்.199AB/14B ல் வடக்கு பகுதியில் கிழக்கு மேற்காக 5 குழி நிலத்தினையும் ஆக்கிரமித்து விட்டுள்ளனர். மேற்படி பிரதிவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

சொத்துக்கள் வழக்குரையில் சொத்து விபரத்தில் ஆ பட்டியல் என காட்டப்பட்டு A, B, C, D மற்றும் E, F, G, H என வழக்குரையின் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

**2.5.** மேற்படி 1ம் வாதியின் கணவர் பாலகிருஷ்ணன் பிரதிவாதிகளின் செயல் குறித்து பரவாக்கோட்டை காவல நிலையத்தில் புகார் அளித்துள்ளார். மேற்படி 1ம் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் நடக்கும் பிரச்சனை உரிமையியல் பிரச்சனை என்பதாக கூறி காவல் துறையினர் சார்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்னர் வாதிகள் தரப்பில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கும், காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும் பிரதிவாதிகளின் செயல்குறித்து புகார் அனுப்பியுள்ளனர். மேற்படி வாதிகள் தரப்பில் கொடுத்த புகாரினை பெற்றுக்கொண்ட காவல்துறை உயர்அதிகாரிகள் கடந்த 12.01.2016 ம் தேதி 2 ம் வாதியை திருவாரூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் செயல்படும் நில அபகரிப்பு தடுப்புபிரிவில் விசாரணைக்கு ஆஜராக வலியுறுத்தி அழைப்பாணை அனுப்பியுள்ளனர். வாதிகள் தரப்பில் மேற்படி விசாரணைக்கு சென்றும் பிரதிவாதிகள் மீது இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**2.6.** 1ம் வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்கள் குறித்து பிரதிவாதிகள் மூன்றாம் தரப்பினர் ஆவார்கள். பிரதிவாதிகளுக்கும், வழக்கிடை சொத்துக்களுக்கும் எந்தவித உறவும் கிடையாது. ஆகவே 1ம் வாதிக்கு சொந்தமான வழக்கிடை சொத்துக்களில் ஒரு பகுதியான சர்வே எண்.199AB/8 ல் கிழக்கு பகுதியில் வடக்கு தெற்காக 6 குழி நிலத்தையும் சர்வே எண்.199AB/14B ல் வடக்கு பகுதியில் கிழக்கு மேற்காக 5 குழி நிலத்தினை (மொத்தம் 11 குழி) பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்துள்ளதை வாதிகளுக்கு மீட்டளித்திட கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **1,2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம் :-**

**3.1.** வாதிகள் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். 1ம் வாதி வழக்கில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளார். தாவா சொத்து ஆதியில் இறந்துபோன கோவிந்தசாமி என்கிற கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமாக இருந்து அவருக்கு வேலுச்சாமி மற்றும் சேகர் ஆகிய இரு மகன்கள் உள்ளனர். அவர்கள் அவர்களது தந்தையார் சொத்தை வாய்மொழியாக இருவரும் பிரித்துக்கொண்டு அனுபவம் செய்து வந்துள்ளனர். வேலுச்சாமி இறந்த பின்பு அவர் அனுபவித்து வந்த சொத்துக்களை அவரது வாரிசுகளான பூங்கோதை, சசி, செந்தில்குமார், அசோக்குமார் ஆகியோருக்கு கிடைக்கப்பெற்று அவர்கள் அவரது அனுபவத்தில் உள்ள கிரய பத்திரத்தில் சுட்டிக்காட்டி தான் அனுபவித்து வந்த நிலங்களை கடந்த 12.09.2014 ம் தேதியன்று விற்பனை செய்துள்ளனர்.

**3.2.** மேற்படி கோவிந்தசாமியினுடைய மகன் G.சேகர் என்பவர் கடந்த 07.09.2015 ம் தேதிக்கு முன்புவரை ஆண்டு அனுபவித்து வந்துள்ளார். அவருக்கு பின்பு 07.09.2015 ல் G.சேகர் மற்றும் அவரது மகள் ரதி என்பவரும் கடந்த 07.09.2015 ல் தமிழரசன் மகன் சிலம்பரசனுக்கு அவர் அனுபவித்து வந்த சொத்தை கிரய சாசனம் செய்து கிரயத்தை பதிவு செய்தும் மற்றும் அனுபவித்து வந்த நிலம் 9 குழியை அனுபோக பாத்திய விடுதலை பத்திரம் மூலம் விற்பனை செய்துள்ளார். அதன்படிக்கு 2 ம் பிரதிவாதிக்கு சொத்து கிடைக்கப்பெற்று 2 ம் பிரதிவாதி வேலி அடைப்புடன் ஆண்டு அனுபவித்து வருகிறார்.

**3.3.** வயல்வெளிகளில் நான்கு பக்கமும் வரப்புகள் அமைத்து நிலத்தின் எல்லைகளை குறியீடு செய்து அனுபவித்து வருவது கிராமங்களில் வழக்கமாகவும், நிலவியலிலும் தற்சமயம் வரையிலும் கிராமப்புறத்தில் உள்ள சாகுபடி நிலத்தின்

நிலையாகும். அதன்படி நான்கு புறத்திலும் உள்ள வரப்புகள் உள்ள சாகுபடி நிலத்தை 2014 ல் பெற்ற 1ம் வாதி ஒரு வருட காலத்தில் சாகுபடி செய்ததில் அவருக்கு கிடைத்த சொத்தில் இதுநாள் வரை சாகுபடி செய்து வருகிறார். அவருக்கு அந்த நான்கு பகுதிகளில் உள்ள வரப்புகள்தான் எல்லைகள். இதைவிடுத்து தற்சமயம் ஒரு வருடம் கழித்து கோவிந்தசாமியின் மகன் G.சேகர் ஆண்டு அனுபவித்து வந்து அதன் பின்பு 2ம் பிரதிவாதிக்கு உரிய பிரதி உபயோகத்திற்கு கொடுக்கப்பட்டு 2ம் பிரதிவாதி சர்வ சுதந்திரத்துடன் ஆண்டு அனுபவித்து வந்த சொத்தில் எந்தவித விவரமும் தெரிவிக்காமல் 11 குழி நிலத்தை ஆக்கிரமித்துள்ளதாகவும், மேலும் சொத்து விவரத்தில் மொத்த சொத்து விவரத்தையும் காட்டி சொத்தினுடைய அளவுகளை கூடுதலாக காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் வாதி வேண்டுமென்றே அவர் எப்பொழுதும் அனுபவித்து வராத வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள A, B, C, D மற்றும் E, F, G, H சொத்துக்கள் என்று எந்தவிதமான அளவீடும் காட்டப்படாமல் குறிப்பிட்டுள்ளதிலிருந்தே வாதி வேண்டுமென்றே பொய்யான தகவலை சொல்லி வழக்கிட்டு 1, 2 பிரதிவாதிகளை அச்சுறுத்தி எப்படியும் மிரட்டி பணிய வைத்துவிடலாம் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி அவர் கிரயம் பெற்றபொழுது கிரயம் செய்து கொடுத்த நபர்களிடம் அவர் அனுபவம் செய்து வந்த நிலத்தை அனுபவித்தது மட்டுமே கிரயம் பெற்றுள்ளனர். கிரய பத்திரத்திலும் அனுபவித்து வருகின்ற என்று காட்டி அவர் அனுபவம் செய்து வந்த நிலத்தை விற்பனை செய்துள்ளனர். 1ம் வாதி கிரயம் கொடுத்த நபர்கள் என்ன அனுபவம் செய்து வந்தார்களோ அந்த அனுபவம் மட்டுமேதான் அவர்கள் கையாள முடியும் அதை விடுத்து கோவிந்தசாமியின் மற்றொரு குமாரர் G.சேகர் அனுபவம் செய்து வந்து

அவர் அனுபவித்த சொத்துக்களை கேட்பதற்கும், அவர் விற்பனை செய்த அனுபவ சொத்துக்களை கேட்பதற்கும் 1ம் வாதிக்கு எவ்விதத்திலும் உரிமையில்லை.

**3.4.** 2ம் பிரதிவாதி கோவிந்தசாமி மகன் G.சேகர் என்பவரிடம் தான் பெற்ற கிரய பத்திரத்தினுடைய நகலையும் G.சேகர் மற்றும் அவரது மகள் ஆகிய இருவரும் தாங்கள் அனுபவித்து வந்த 9 குழி நிலத்தை அனுபோக பாத்திய விடுதலை பத்திரம் மூலம் 2ம் பிரதிவாதிக்கு ரூ.15,000/-த்திற்கு விற்பனை செய்துள்ள விடுதலை பத்திரத்தினுடைய நகலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வருகிற சொத்தை பொறுத்து புகைப்பட நகல் இணைக்கப்பட்டுள்ளது.

**3.5.** 1ம் வாதிக்கு எவ்வகையிலும் உரிமையோ அல்லது அனுபோகமோ இல்லாத சொத்தில் தான் அனுபவித்து வருவதாக பொய்யான தகவலை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டமுரணாக உள்ளது. வழக்கு பொய்யான தகவலை சொல்லியுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. 2ம் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, விசாரணை செய்யப்பட்டு, பொய்யான புகாரை கொடுத்ததால் 2ம் வாதியை கண்டித்து அனுப்பியுள்ளனர். அதை மறைத்து வழக்குரையில் பொய்யான தகவலை வாதிகள் சொல்லியுள்ளார்கள். வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை.

**3.6.** 2ம் பிரதிவாதி கடந்த 02.09.2015 முதல் சர்வ சுதந்திரமாக வேலி அடைப்புடன் ஆண்டு அனுபவித்து வருகின்ற சொத்தில் 1ம் வாதிக்கு எவ்விதமான உரிமையும் இல்லை. அனுபோகமும் இல்லை. 2ம் பிரதிவாதியை எப்படியும் மிரட்டி பணிய வைத்து அவருக்கு அருகில் உள்ள சொத்துக்களை கைப்பற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான தகவலை சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.7.** பொய்யான தகவலை சொல்லி அவருக்கு உரிமையும் அனுபோகமும் இல்லாத சொத்தை மீட்டுத்தரக் கூறுவது சட்ட முரணாக உள்ளது. அவருக்கு உரிமையும், அனுபோகமும் இல்லாத சொத்தில் வாதிக்கு உரிமை கோர இயலாது. எனவே பொய்யான தகவலைச் சொல்லி வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

**4)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**வழக்கெழுவினாக்கள் :-**

1. வாதி கோரும் சொத்து சுவாதீனப் பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதா?
2. வாதிக்கு கிடைக்க கூடிய இதர பரிகாரம் என்ன?

**5) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் :-**

வாதிகள் தரப்பில் 1ம் வாதி தனலெட்சுமி வா.சா.1 ஆகவும், சுப்ரமணியன் என்பவர் வா.சா.2 ஆகவும், வேலப்பன் என்பவர் வா.சா.3 ஆகவும், மணிகண்டன் என்பவர் வா.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.3ன் மூலம் வா.சா.ஆ.9 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி தமிழரசன் என்பவர் பி.சா.1 ஆகவும், ரதி என்பவர் பி.சா.2 ஆகவும், தனியரசு என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.1ன் மூலம் பி.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **வாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

வாதிகளுக்கு சொந்தமான சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்பதை வாதிகள் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதிகள் கோருகின்ற வசப்பரிகாரம் பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கதக்கது என வாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

7) **பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

தாவா சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபிக்காமல் பிரதிவாதிகளின் உரிமையும், அனுபோகமும் உள்ள சொத்தினை வசப்பரிகாரம் கோர முடியாது என்பதால் வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) **தீர்வு :-**

**எழுவினா -1 -க்கான தீர்வு :-**

i) வாதிகளுக்கு சொந்தமான சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதிகளைச் சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) தாவா சொத்தானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து பரிசீலிக்கையில், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், உள்ளிக்கோட்டை சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, தளிக்கோட்டை கிராமத்தில் தாவா சொத்தானது உள்ளது என வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

iii) வாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக 1ம் வாதி தனலெட்சுமி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 12.09.2014 ம் தேதியில் தாவா சொத்து 1ம் வாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட கிரய ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், தாவா சொத்திற்கு 1ம் வாதி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.2 ஆகவும், தாவா சொத்திற்கு 1ம் வாதி பெயரில் உள்ள சிட்டா நகல் வா.சா.ஆ.3 ஆகவும், தாவா சொத்திற்கு 1ம் வாதி பெயரில் உள்ள அடங்கல் பதிவேடு நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 2 ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் 1ம் வாதிக்கு எதிராக தாக்கல் செய்த கேவியட் மனு நகல் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 07.09.2015 ம் தேதியில் 2 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 1ம் வாதியின் கணவர் கடந்த 28.11.2015 ம் தேதியில் திருவாரூர் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு புகார் மனுவின் நகல் அஞ்சலக அனுப்புகை ரசீதுகள் வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 09.01.2016 ம் தேதியில் திருவாரூர் மாவட்டம் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவிலிருந்து 1ம் வாதியின் கணவருக்கு வரப்பெற்ற அழைப்பாணை வா.சா.ஆ.8 ஆகவும், கடந்த 23.11.2015 ம் தேதியில் வழங்கியுள்ள சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சுப்ரமணியன் என்பவர் வா.சா.2 ஆகவும், வேலப்பன் என்பவர் வா.சா.3 ஆகவும், மணிகண்டன் என்பவர் வா.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

iv) பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக 1ம் பிரதிவாதி தமிழரசன் என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 07.09.2015 ம் தேதியன்று எழுதப்பட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவக நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. பி.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ரதி என்பவர் பி.சா.2 ஆகவும், தனியரசு என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

v) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரய ஆவணமான அசல் ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 12.09.2014ம் தேதியன்று தாவா சொத்தினை வேலுச்சாமி மனைவி பூங்கோதை மற்றும் வேலுச்சாமியின் மகன்களான சசிகுமார், செந்தில்குமார், அசோக்குமார் ஆகியோர் 1ம் வாதிக்கு கிரயம் கொடுத்தார் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையிலும், 1ம் வாதியின் பெயருக்கு தாவா சொத்துக்கள் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது 1ம் வாதியின் பெயரில் வருவாய் துறையால் வழங்கப்பட்ட பட்டா என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது 1ம் வாதியின் பெயரில் உள்ளது என்பதற்கான அடங்கல் பதிவேடு என்பதும் தெரிய வருகிறது. வாதிகள் தரப்பில் தளிக்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் வா.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டு தாவா சொத்துக்களானது 1ம் வாதியின் பெயரில் உள்ளது என சிட்டா மற்றும் அடங்கல் வழங்கியுள்ளார் என்பது வா.சா.ஆ.9 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேற்படி தாவா சொத்தினை 1ம் வாதியானவர் வா.சா.ஆ.1 ஆவணமான கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்ற பின்னர் தாவா சொத்தானது 1ம் வாதியின் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டு 1ம் வாதியின் அனுபோகத்திலும், உரிமையிலும் உள்ள சொத்து என்பது வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

vi) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 2 ம் பிரதிவாதியானவர் 2 ம் வாதி பாலகிருஷ்ணன் மற்றும் கலைவாணன் என்பவர் மீது இந்நீதிமன்றத்தில் தாவா சொத்து தொடர்பாக கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 07.09.2015 ம் தேதியன்று 2 ம் பிரதிவாதி சிலம்பரசன் என்பவர் சேகர் மற்றும் ரதி என்பவரிடமிருந்து தாவா சொத்தின் அருகில் உள்ள சொத்தினை கிரயம் வாங்கினார் என்பதற்கான கிரய ஆவணம் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தையே பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

vii) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 2 ம் வாதி பாலகிருஷ்ணன் தாவா சொத்தில் அளவீடு செய்து அனுபோகம் செய்து வரும்போது பிரதிவாதிகள் இடையூறு செய்தது சம்பந்தமாக திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அனுப்பினார் என்பது தெரிய வருகிறது. மேற்படி புகாரின் அடிப்படையில் திருவாரூர் மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 2 ம் வாதியை விசாரணைக்காக அழைப்பாணை அனுப்பப்பட்டது என்பது வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது.

viii) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தானது 1 ம் வாதியால் கிரயம் வாங்கப்பட்டு அவரால் அனுபோகம் செய்து வரும் சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யும் சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு பிரச்சனைகள் நிலுவையில் இருந்து வருகிறது என்பது தெரிய வருகிறது.

ix) மாறாக பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் உள்ள சொத்துக்களை வாதிகள் வசப்பரிகாரம் கோர எந்தவித அருகதையும் இல்லை என வாதம் முன் வைக்கப்பட்டது. மேற்படி வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் முழுவதும் வாதிகளுக்கு சொந்தமென காணப்பட்டிருந்தாலும் மேற்படி 1ம் வாதிக்கு விற்பனை செய்த வேலுச்சாமி என்பவருக்கு தாவா சொத்துக்கள் முழுவதும் அவருக்கு உரிமையுடைய சொத்துக்களாக இருந்து விற்பனை செய்தாரா என்பது குறித்து வாதிகள் தரப்பில் எந்தவித சாட்சியமும், சான்றாவணமும் முன்னிலைப்படவில்லை என்பது தெரிய வருகிறது. இதுகுறித்து 1ம் வாதியான வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

“ **2014 வருடம் வேலுச்சாமி பூங்கோதை என்பவரிடமிருந்து 184 குழி வீதம் எனது பெயரில் கிரயம் வாங்கப்பட்டது. பூங்கோதைக்கு அந்த கிரய சொத்து எப்படி உடமைப்பட்டது என்றால் அவரது பெற்றோர்கள் அவருக்கு பிரித்து கொடுத்திருப்பார்கள். அந்த மூல ஆவணத்தை நான் பார்க்கவில்லை. நான் மேற்படி சொத்தை பூங்கோதையின் அனுபோகத்தின் அடிப்படையில் கிரயம் வாங்கியுள்ளேன்".** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் மூலம் தாவா சொத்துக்களை 1ம் வாதி கிரயம் வாங்கியது கோவிந்தசாமியின் மகன்களான வேலுச்சாமி மற்றும் சேகர் என்பவர்களில் வேலுச்சாமி என்பவரிடமிருந்து 1ம் வாதி கிரயம் வாங்கினார் என்பது தெரிய வருகிறது. அதேபோலவே 2ம் பிரதிவாதியானவர் கோவிந்தசாமியின் மற்றொரு மகனான சேகர் என்பவரிடமிருந்து தாவா சொத்தின் அருகிலுள்ள சொத்தை கிரயம் வாங்கினார் என்பது

வா.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.1 ஆவணங்களின்படி தெரிய வருகிறது. இதுகுறித்து 1ம் வாதி வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

“ **சேகர் அனுபோகம் செய்து வந்த சொத்தைதான் சிலம்பரசனிடம் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் குறைவு சம்பந்தமாக எனது சொத்தை கிரயம் செய்த நபரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். அதற்கு அந்த நபர் எவ்வளவு விஸ்தீரணம் அனுபோகம் செய்து வந்தாரோ அந்த விஸ்தீரணத்தை பொறுத்து கிரயம் செய்துள்ளதாக கூறினார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

x) மேற்படி சாட்சியத்தின்மூலம் 1ம் வாதி கோவிந்தசாமியின் மகன்களின் ஒருவரான வேலுச்சாமி என்பவரிடமிருந்து தாவா சொத்தினையும், 2ம் பிரதிவாதி கோவிந்தசாமியின் மற்றொரு மகனான சேகரிடமிருந்து தாவா சொத்துக்களில் அருகிலுள்ள இடத்தையும் கிரயம் வாங்கியுள்ளார் என்பது தெரிய வருகிறது. 1ம் வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுத்த வேலுச்சாமியின் மகனான வேலுச்சாமியின் வாரிசுதாரர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது தொடர்பாக வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, “ **2014 வருடம் வேலுச்சாமி பூங்கோதை என்பவரிடமிருந்து 184 குழி வீதம் எனது பெயரில் கிரயம் வாங்கப்பட்டது. பூங்கோதைக்கு அந்த கிரய சொத்து எப்படி உடமைப்பட்டது என்றால் அவரது பெற்றோர்கள் அவருக்கு பிரித்து கொடுத்திருப்பார்கள். அந்த மூல ஆவணத்தை நான் பார்க்கவில்லை"** என்று சாட்சியம் அளித்ததன் மூலம் தாவா சொத்தின் முழு விஸ்தீரணமும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளவாறு முழுவதும் 1ம் வாதிக்கு கிரயம் கொடுத்த கோவிந்தசாமி வாரிசுதாரரான வேலுச்சாமிக்கு பாகமாய் கிடைத்தது என்பதை வாதிகள் தரப்பில் எந்தவித

சாட்சியத்தையோ அல்லது ஆவணத்தையோ முன்னிறுத்தி நிரூபிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

xi) மேலும், வாதிகளின் சாட்சியத்தை ஒத்துரைத்து சுப்ரமணியன் என்பவர் வா.சா.2 ஆகவும், வேலப்பன் என்பவர் வா.சா.3 ஆகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி வா.சா.2 ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

" **வழக்கு சொத்து எந்த தேதியில் அபகரிக்கப்பட்டது என்பது தெரியாது. வழக்கு சொத்து வாதி எப்போது கிரயம் வாங்கினார் என்பது தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் கூறப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வயல் வேலி அமைப்புடன் உள்ளது"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xii) மேலும், வா.சா.3 ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **"வாதியின் வழக்கை நான் படித்து பார்க்கவில்லை. நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை. வாதி தாவா சொத்தை எந்த தேதியில் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் நிலம் வேலி அமைப்புடன் உள்ளது"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xiii) மேற்படி வா.சா.2 மற்றும் வா.சா.3 சாட்சியத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியானவர் அவருடைய சொத்தை வேலி அமைப்புடன் அனுபோகம் செய்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. இந்நிலையில், வாதிகள் தரப்பில் வாதிகளின் சொந்தமான சொத்தை ஆக்கிரமித்துள்ளார் என வாதம் செய்வது குறித்து பரிசீலனை செய்கையில், 2 ம் பிரதிவாதி பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்ற சொத்து நீங்கலாக மீதமுள்ள 9 குழி நிலத்தை தனது அனுபோகத்தில் வைத்துள்ளார் என்பது

பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட 9 குழி நிலமும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை வாதிகள் தரப்பில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட 9 குழி நிலமும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தால் மட்டுமே அந்த குறித்து வசப்பரிகாரம் கோர முடியும் என்பது சட்ட விதியாகும். மேற்கண்ட 9 குழி நிலமும், 2ம் பிரதிவாதிக்கு எவ்வாறு கிடைத்தது என்பது குறித்து தனது கட்சியில் சேகர் மற்றும் அவரது மகள் வெண்ணிலை கிரயமாக பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் விற்பனை செய்தார்கள் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வெண்ணிலை கிரயம் தொடர்பாக 1ம் பிரதிவாதியான பி.சா.1 ஐ வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

" **நான் குறிப்பிடும் கூடுதலாக உள்ள 9 குழி நிலத்திற்கு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. சேகருக்கு பாகமாக வந்த இடத்தை எங்களுக்கு வெண்ணிலை பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்தார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xiv) மேற்படி வெண்ணிலை பத்திரத்தை எழுதிக்கொடுத்த சேகரின் மகள் ரதி என்பவர் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பி.சா.2 ஐ வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

" **நான் தாவா சொத்தில் 9 குழியை வெண்ணிலை ஆவணமாக 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தபோது அதை பதிவு செய்தேனா என்றால் இல்லை. வெண்ணி பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்றால் 2015 ஆனால் சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வெண்ணிலை பத்திரம் என்னால் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xv) தாவா சொத்தில் மீதமுள்ள 9 குழி நிலமானது கோவிந்தராஜின் வாரிசுதாரர்களான வேலுச்சாமி மற்றும் சேகர் ஆகியோர்களில் யாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு உரிமையுள்ள சொத்து என்று தீர்மானிக்காமல் வா.சா.ஆ.1 ஆவணப்படி 1ம் வாதிக்கு வேலுச்சாமியும் வெண்ணிலை பத்திரத்தின்படி சேகர் மற்றும் ரதி ஆகியோர் 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளதால் மேற்கண்ட சொத்தானது கோவிந்தசாமியின் வாரிசுதாரர்களான வேலுச்சாமி மற்றும் சேகர் ஆகியோரில் யாருக்கு பாத்தியம் உள்ள சொத்து என்று தீர்வு காண்பது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால், வாதியானவர் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராததால் மேற்கண்ட சொத்தானது கோவிந்தசாமியின் வாரிசுதாரர்களில் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து இரு தரப்பிலும் நிரூபிக்கவில்லை.

xvi) மேற்படி பி.சா.1 மற்றும் பி.சா.2 சாட்சியத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் மீதமுள்ள 9 குழி நிலம் 2ம் பிரதிவாதியின் அனுபோகத்தில் உள்ளது என்பது தெரிய வருகிறது. வாதிகளின் கட்சிப்படி 11 குழி பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளது என கட்சி செய்யும் வாதியானவர் மேற்கண்ட பிரதிவாதிகளின் அனுபோகத்தில் உள்ள 11 குழி நிலமும் 1ம் வாதிக்கு கிரயம் கொடுத்த கோவிந்தசாமியின் வாரிசுதாரரான வேலுச்சாமிக்கு உரிய முறையில் கிடைத்து பின்னர் 1ம் வாதிக்கு கிரயம் கொடுத்தார் என்று வாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. ஆகவே, பிரதிவாதிகளின் அனுபோகத்தில் உள்ள சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியம் உள்ள சொத்து என்று விளம்புகை பரிகாரம் கோராமல் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் உள்ள சொத்தினை பொறுத்து வாதிகளுக்கு கிடைக்கதக்கது என வசப்பரிகாரம் வழங்க இயலாது

என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது. ஆகவே, வாதிகள் கோருகின்ற வசப்பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என எழுவினா-1 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

9) **<u>எழுவினா- 2 க்கான தீர்வு</u>** :-

வாதிகள் கோருகின்ற வசப்பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் ஏதும் இல்லை என்றும், செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என எழுவினா-2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**10) முடிவில்,**

1. தாவா செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.30 17:57:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திருமதி.தனலெட்சுமி (1ம் வாதி), க/பெ.பாலகிருஷ்ணன். |
| வா.சா.2 | திரு.சுப்ரமணியன், த/பெ. சங்கரன். |
| வா.சா.3 | திரு.வேலப்பன், த/பெ.தங்கவேல். |
| வா.சா.4 | திரு.மணிகண்டன் , த/பெ. ஆறுமுகம். |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.09.2014 | தாவா சொத்து 1ம் வாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட கிரய ஆவணம் அசல். |
| வா.சா.ஆ.2 | -- | தாவா சொத்திற்கு 1ம் வாதி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு. |
| வா.சா.ஆ.3 | -- | தாவா சொத்திற்கு 1ம் வாதி பெயரில் உள்ள சிட்டா நகல். |
| வா.சா.ஆ.4 | -- | தாவா சொத்திற்கு 1ம் வாதி பெயரில் உள்ள அடங்கல் பதிவேடு நகல். |
| வா.சா.ஆ.5 | -- | 2ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் 1ம் வாதிக்கு எதிராக தாக்கல் செய்த கேவியட் மனு நகல். |
| வா.சா.ஆ.6 | 07.09.2015 | 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணத்தின் சார்பதிவக நகல். |
| வா.சா.ஆ.7 | 28.11.2015 | திருவாரூர் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு புகார் மனுவின் நகல் அஞ்சலக அனுப்புகை ரசீதுகள். |
| வா.சா.ஆ.8 | 09.01.2016 | திருவாரூர் மாவட்டம் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவிலிருந்து 1ம் வாதியின் கணவருக்கு வரப்பெற்ற அழைப்பாணை. |
| வா.சா.ஆ.9 | 23.11.2015 | சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு. |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :-**

| | |
|---|---|
| பி.சா.1 | திரு.தமிழரசன் (1ம் பிரதிவாதி), த/பெ. மணி. |
| பி.சா.2 | திருமதி.ரதி (3 வது நபர்), க/பெ. தனியரசு. |
| பி.சா.3 | திரு.தனியரசு (3ம் தரப்பினர்), த/பெ. நமச்சிவாயம். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 07.09.2015 | கிரய ஆவணத்தின் சார்பதிவக நகல். |

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.30 17:57:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.